| Publication : Thinakathir | Subject : AVI Press Conference Chennai |
|---|---|
| Date of Publish : 15th July 2018 | Edition :Chennai |

# மின்–சிகரெட்டுக்கு தடை வேண்டாம்
# ஒழுங்கு முறை சட்டத்தை உருவாக்குமாறு
# அசோசியேஷன் ஆஃப் வேப்பர்ஸ் கோரிக்கை

சென்னை: கடந்த மாதம், தமிழக சட்டமன்றத்தில் மின் சிகரெட்டுகளை தடை செய்வது குறித்த அறிவிப்பை சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் வெளியிட்டார். இது தொடர்பாக மின்-சிகரெட் பயனர்களின் பிரதிநிதியாகத் திகழும் அசோசியேஷன் ஆஃப் வேப்பர்ஸ் இந்தியா (A V I) அமைப்பு, மாநிலம் முழுவதும் மின்-சிகரெட்டுகளை தடை செய்யும் தமிழக அரசின் முன்மொழிவை அமல்படுத்த வேண்டாம் என வலியுறுத்தியுள்ளது.

இதுசம்பந்தமாக தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் சுகாதாரத்துறை முதன்மை செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோரை, AVI இயக்குனர்கள் சம்ராட் சௌத்ரி, பிரதீக் குப்தா சந்தித்து பேச உள்ளதாக சென்னையில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

மின்-சிகரெட்டுகளுக்கு தடை அறிவிப்பை திரும்பப்பெருவது மற்றும் புகை பிடிப்பதற்கான மாற்று வழிமுறைகளாகத் திகழும் வேப்பிங் மற்றும் ENDS அல்லது மின்-சிகரெட்டுகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதற்கானதொரு சட்டத்தை உருவாக்குமாறு கோரிக்கை வைக்க உள்ளதாகவும் மேலும் மாநிலத்தில் வேப்பிங்கை கட்டுப்படுத்த, ஒரு திறன்வாய்ந்த கொள்கையை உருவாக்க உதவும் வகையில், 4,000 - ற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட 120 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் முதன்மை செயலாரிடம் சமர்பிக்க உள்ளதாக கூறினர்.